முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.04.2024,** திங்கட்கிழமை

1. அறம் காக்கும் ஞான வள்ளலே
ஆறுமுக அரங்க ஞானியே
வரம் தந்து உலகை மீட்கும்
வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் குரோதி தகர் திங்கள்
ஆசிபட மூவையோர் திகதி சோமவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 16 ம் நாள், 29.04.2024, திங்கட்கிழமை)
அறிவிப்பேன் இசைஞானியார் யானும்
3. யானும் துல்லிய ஆசிதனை
உலகநலம்பெற உரைப்பேன்
ஞானமாக அரங்கன் அருளும்
நன்னெறியாம் சன்மார்க்க நெறிதனை
4. நெறிதனை மக்களெல்லாம் ஏற்று
நிலவுலகில் ஞானம் பயில
அறிவுத்தெளிவு ஞானம் கூடி
ஆன்ம பலமும் கண்டு உயர்வர்
5. உயரவே அரங்கமகானை குருவாய்
உலகம் ஏற்கும் வண்ணம் மக்கள்
தயவாய் அரங்கன் புகழை
தரணியெங்கும் கொண்டு செல்ல
6. செல்லவே உகந்த மார்க்கமாக
செப்பிட அன்னதான சேவையை
வல்லமைபட அரங்கன் உருவாக்கியிருக்க
வழிமொழிந்து உலகமெங்கும் கிளைகள்
7. கிளைகள் தருமசாலைகளாக துவக்கி
குருவின் பேரில் நடத்திவர
உலகம்தன்னில் வறுமை விலகி
உயர்வோடு வளங்கள் பெருகும்

8. பெருகவே மக்களிடை மனநிலை
பெருந்தன்மை கொண்டதாக மாறி
தரும வழியில் பொருளுதவி செய்திட
தருமவான்களாக எங்கும் நிரம்பி

7. நிரம்பியே அரங்கமகான் கொள்கை
நிலவுலகம் தன்னில் நிலைத்திட
வரம்பிலா கலித்துன்பங்கள் விலகி
வையகம் பாதுகாப்பான நிலைகளாகி

8. ஆகியே மக்களை பாதுகாக்கின்ற
ஆற்றல்மிக்க தலைமைகள் தன்னை
மகிழவே மக்கள் ஏற்கும் வண்ணம்
மகான்கள் ஆசிபட ஆளுமைகள்

9. ஆளுமைகள் ஞான ஆட்சியாக
அறிவிப்பேன் உலகமாற்றம் கண்டு
வலுவான ஞானசித்தர் காலமாகி
வையகம் எல்லாப் பெருமையும் அடையும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—